**பாக அமைப்பாளர்கள்**

பாகம் – 36 : கி.வெங்கடேசன், 215/9, மண்டபத்தெரு, சிறுணை பெருகல், காஞ்சிபுரம்.

பாகம் – 37 : மூ.அரவிந்தராஜ், 80, படவேட்டம்மன் கோயில் தெரு, சிறுனைபெருகல், காஞ்சிபுரம்.

## முசரவாக்கம் ஊராட்சி

### அரசுப்பண்ணை கிளை

**அமைப்பாளர் :** உ.தட்சிணாமூர்த்தி, 172, வண்ணார் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) செ.மணி, 172, வண்ணார் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) ம.ராமு, 124, நடுத்தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) செ.ஆகாஷ், 1, கொட்டா புளித்தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### யாதவர் குடியிருப்பு கிளை

**அமைப்பாளர் :** ஆ.தர்மன், 258, கிழக்குத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) பா.பிரகாஷ், 270, கிழக்குத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) உ.பிரபாகரன், 248, கிழக்குத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) ரா.இரஞ்சித்குமார், 14, பிராமணர் வீதி, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### முசரவாக்கம் கிளை

**அமைப்பாளர் :** பா.கோகுல்நாத், 9, பிராமணர் வீதி, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வீ.கிஷோர், 50, பிராமணர் வீதி, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) இர.தங்கராஜ், 186, தோட்டக் காரத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) தி.ரோஹித், 59, பிராமணர் வீதி, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### கொதுகை ஏரி கிளை

**அமைப்பாளர் :** வெ.லட்சுமிபதி, 540, கொதுகைஏரி, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.ஜனார்த்தனன், கொதுகைஏரி, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) பு.சத்தியமூர்த்தி, கொதுகைஏரி, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) தே.லட்சுமணன், 221, மந்தைவெளித் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### சத்யா நகர் கிளை

**அமைப்பாளர் :** த.தாமரைச்செல்வன், தோட்டக்காரன் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) த.தாமோதரன், பட்டறைத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) சே.பாண்டியன், பட்டறைத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) ஆ.தினேஷ், பட்டறைத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### முசரவாக்கம் குடியிருப்பு கிளை

**அமைப்பாளர் :** மு.இளையராஜா. 200, பெருமாள் கோயில் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.தனுஷ், 173, பெருமாள் கோயில் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) ர.அவினாஷ், 201, பெருமாள் கோயில் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) ப.வெற்றிச்செல்வன், 109, கோட்ரஸ் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### சடையவிநாயகபுரம் கிளை

**அமைப்பாளர் :** ஜ.ஸ்ரீதர், 468/2, சடையவிநாயகபுரம், முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.குமரேசன், 441, சடையவிநாயகபுரம், முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) ர.பார்த்திபன், 449, சடையவிநாயகபுரம், முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) ஏ.மணிகண்டன், 448, சடையவிநாயகபுரம், முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**பாக அமைப்பாளர்கள்**

பாகம் – 10 : அ.இளையராஜா, 200, பெருமாள் கோயில் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

பாகம் – 11 : சா.மாலிக் பாஷா, 398, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

பாகம் – 12 : பா.கோகுல்நாத், 9, பிராமணர் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

பாகம் – 13 : அ.அன்பழகன், 300, கிழக்குத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

பாகம் – 14 : உ.தட்சிணாமூர்த்தி, 172, வண்ணார் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

## பெரும்பாக்கம் ஊராட்சி

### ஆதிதிராவிடர் குடியிருப்பு கிளை

**அமைப்பாளர் :** அ.விவேகானந்தன், 67/74, பஜனை கோயில் தெரு, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1)ம.விக்னேஷ், 5, பிரதான சாலை, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம். (2) ர.சுபாஷ், 75, மாரியம்மன் கோயில் தெரு, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம். (3) ர.ஜெயகாந்தன், 35, பிரதான சாலை, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம்.

### பெரும்பாக்கம் கிளை

**அமைப்பாளர் :** ம.பிரவீன்குமார், 4, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சீ.நேதாஜி, 172, பிரதான சாலை, பெரும்பாக்கம், காஞ்சிபுரம். (2) சே.மணிபாரதி, 172, பிரதான சாலை, பெரும்பாக்கம், காஞ்சிபுரம். (3) வெ.அஜித்குமார், 4, பிரதான சாலை, பெரும்பாக்கம், காஞ்சிபுரம்.

### யாதவ கிளை :

**அமைப்பாளர் :** மா.பாபு, 7/38, பஜனை கோயில் தெரு, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1)ஆ.சூரியா, 4, பெரும்பாக்கம் தெரு, முத்துவேடு, காஞ்சிபுரம். (2) ப.கீர்த்திவாசன், ஆற்றங்கரை ஒர தெரு, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம். (3) கி.ஜானகிராமன், 4, பெரும்பாக்கம் தெரு, முத்துவேடு, காஞ்சிபுரம்.

**பாக அமைப்பாளர்**

பாகம் – 15 : உ.சதீஷ்குமார், 165, எலந்தோப்பு தெரு, பிரதான சாலை, பெரும்பாக்கம், காஞ்சிபுரம்.

## கிளார் ஊராட்சி

### கிளார் குடியிருப்பு கிளை

**அமைப்பாளர் :** ர.சாருகேஷ், 8, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சொ.வாஞ்சிநாதன், 11, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம். (2) ஜெ.தினேஷ், 258, தாமல் சாலை, கிளார், காஞ்சிபுரம். (3) அ.ஆதித்யா, 190, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

### கிளார் மேட்டுத்தெரு கிளை

**அமைப்பாளர் :** ப.விக்னேஷவரன், 299, மேட்டுத்தெரு, கிளார், தாமல், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வி.தமிழ்ச்செல்வன், 82, மேட்டுத்தெரு, கிளார், தாமல், காஞ்சிபுரம். (2) மு.அன்பழகன், 79, மேட்டுத்தெரு, கிளார், தாமல், காஞ்சிபுரம்.

### கிளார் கிளை

**அமைப்பாளர் :** சு.சஞ்சய், பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஏ.சுதாகர், 25, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம். (2) கு.செல்வராஜ், பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம். (3) அ.தென்னரசு, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

**பாக அமைப்பாளர்கள்**

பாகம் – 8 : ரா.கணேஷ்குமார், 56/1, பள்ளத்தெரு, கிளார், காஞ்சிபுரம்.

பாகம் – 9 : ஸ்ரீ.ஆகாஷ், 209/1, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 06–09–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

---

## இதுவே தமிழ்நாட்டின் பெருமை, திராவிட இயக்கத்தின் சாதனை:

# இன்றைய திருமண பத்திரிகைகளில் ஜாதிப் பெயரைவிட, படித்து வாங்கிய பட்டத்தின் பெயர்கள்தான் அதிகம்!

## மாங்காடு எஸ்.ஜபருல்லா இல்ல மண விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

*சென்னை,செப். 9 -*

**சென்னை திருவேற்காட்டில், மாங்காடு நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற துணைத் தலைவருமான பட்டூர் எஸ்.ஜபருல்லா மகள் சனோபர் பசீலா - அப்துல் மாலிக் சல்மான் திருமண விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திப்பேசினார்.**

**அப்போது 6 பெண்களின் திருமணத்துக்கு உதவிடும் வகையில், அவரது ஏற்பாட்டில் தலா ரூ.1 இலட்சம் என மொத்தம் ரூ.6 இலட்சத்துக்கான காசோலைகளை பயனாளிகளிடம் வழங்கி வாழ்த்தினார்.**

**இதைத் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்தி ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:**

மாங்காடு நகர்மன்றச் செயலாளர், நகர் மன்றத் துணைத் தலைவர் ஜபருல்லா அவர்களின் அன்பு மகள் சனோபர் பசீலா - அப்துல் மாலிக் சல்மான் ஆகியோரின் திருமண விழாவில் பங்கேற்று, உங்கள் அனைவரின் சார்பாக, மணமக்களை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை அளித்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கு, இந்த நேரத்தில் எனது அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுற்றுப்பயணம்**

இந்தத் திருமண விழா கழகத்தின் விழாவாக, இன்னும் உரிமையோடு சொல்ல வேண்டுமென்றால், நம் குடும்ப விழாவாக அனைவரின் வாழ்த்துகளுடன் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்திருந்தால், நிச்சயமாக இந்தத் திருமண விழாவுக்கு வருகை தந்து, திருமணத்தை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி இருப்பார்கள். தமிழ்நாட்டிற்கு பல்வேறு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்காக ஒருவார கால அரசுமுறை சுற்றுப்பயணமாக இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் சென்றிருக்கிறார்.

**தவிர்க்க முடியாத செயல்வீரர்!**

இன்றைக்கு, முதலமைச்சரின் கட்டளைக்கு இணங்க, அவரின் அறிவுறுத்தலின் பேரில், இந்தத் திருமண விழாவை நடத்தி வைக்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

அண்ணன் ஜபருல்லாவைப் பொறுத்தவரைக்கும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தில் அவர் தவிர்க்க முடியாத செயல்வீரர். அண்ணன் அன்பரசன் அவர்களின் வழிகாட்டுதலோடு, மாங்காடு பகுதியை கழகத்தின் அசைக்க முடியாத கோட்டையாக அவர் மாற்றி வைத்திருக்கிறார்.

அண்ணன் ஜபருல்லா அவர்களைப் பொறுத்தவரைக்கும், கலைஞர் அவர்களின் மிகமிக தூய்மையான ஒரு உடன்பிறப்பு. கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் அன்புத்தம்பி. கிட்டத்தட்ட 45 ஆண்டு காலம் கழகத்திற்காக கடுமையான உழைப்பைக் கொடுத்திருக்கிறார். 1989-ஆம் ஆண்டு நம் கழகச் தலைவர் அவர்கள் ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது, அண்ணன் ஜபருல்லா அவர்கள் ஒரு கல்லூரி மாணவனாக இருந்து, தலைவருக்காக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்.

**கூடுதல் பெருமை**

இந்தத் திருமணத்தில் எங்களுக்கெல்லாம் இன்னொரு கூடுதல் பெருமை என்னவென்றால், எப்படி உங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் அன்பரசன் அவர்கள் இளைஞர் அணியில் இருந்து உழைத்து படிப்படியாக முன்னுக்கு வந்தாரோ, அதேபோல அண்ணன் ஜபருல்லா அவர்களும் இளைஞர் அணியில், நம் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டு, இன்றைக்கு இந்தப் பொறுப்பில் இருக்கிறார்.

1992 - ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குன்றத்தூர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டவர்தான் அண்ணன் ஜபருல்லா அவர்கள். 1996- ஆம் ஆண்டு முதல் 4 முறை மாங்காடு நகர்மன்ற துணைத் தலைவராக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

**இதுதான் திராவிடம் செய்த சாதனை!**

கழகம் சார்பாக தலைவர் அவர்கள் எந்தப் போராட்டம், ஆர்ப்பாட்டம் அறிவித்தாலும், அதில் பங்கேற்று முதல் ஆளாக சிறை செல்பவர் அண்ணன் ஜபருல்லா அவர்கள். அண்ணனின் திருமணத்தை 1999-ஆம் ஆண்டு நம் தலைவர் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்கள். இன்றைக்கு அவரின் மகள் திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பை எனக்கு வழங்கி இருக்கிறார்.



திருமண பத்திரிகையைப் பார்க்கும் போது மணமக்களின் பெயர்களை முதலில் பார்த்தேன். மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். இரண்டு பேருமே முதுகலைப் படிப்பைப் படித்துள்ளார்கள்.

75 வருடங்களுக்கு முன்பு திருமண பத்திரிகையில் மணமக்களின் பெயர்களுக்குப் பின்பு பட்டங்கள் இருக்காது. அவர்களின் ஜாதி ஒட்டுப்பெயர்தான் இருக்கும். ஆனால், இன்றைக்கு தமிழ்நாட்டில் நடக்கின்ற திருமணங்களின் பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தீர்கள் என்றால், அந்த ஜாதிப் பெயரைவிட, படித்து வாங்கிய பட்டத்தின் பெயர்கள் தான் அதிகம் இருக்கிறது. இது நம் தமிழ்நாட்டின் பெருமை. இந்த மாற்றம்தான் நம் திராவிட இயக்கத்தின் சாதனை.



**கழக அரசின் சாதனைகள்!**

திராவிட இயக்கத்தின் இலட்சியங்களை நனவாக்குகின்ற வகையில், நம் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் அரசை சிறப்பாக வழிநடத்திக்கொண்டு இருக்கிறார். பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார். இந்த மண்டபத்தில் கூட ஆண்களுக்கு நிகராக, பெண்களும் வந்திருக்கிறீர்கள்.

2021-ஆம் ஆண்டு தலைவர் அவர்கள் முதலமைச்சராக அமர்ந்த பிறகு போட்ட முதல் கையெழுத்தே மகளிர் விடியல் பயணம் திட்டத்திற்கான கையெழுத்துதான். அந்த விடியல் பயணம் திட்டத்தின் மூலம் இந்த நான்கரை ஆண்டுகளில் சுமார் 800 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதம் ஆயிரம் ரூபாய் சேமித்து இருக்கிறார்கள்.

அடுத்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். கிட்டத்தட்ட 20 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். இந்த திட்டத்தை சமீபத்தில் நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவிப்பெறும் பள்ளிகளிலும் நம் முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் திட்டத்தை விரிவுப்படுத்தினார். அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் சிங் அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். பகவந்த் சிங் அவர்கள் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி, அந்தக் கூட்டத்தில் பேசும்போது, ``தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, இது மிக மிக சிறப்பான ஒரு திட்டம். இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களிலும் இந்தத் திட்டத்தைப் பின்தொடர வேண்டும். நான் என்னுடைய பஞ்சாப் மாநிலத்தில் விரைவில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தப் போகிறேன்" என்று பெருமையாகச் சொன்னார்.

**வழிகாட்டுகிறது, திராவிட மாடல்!**

இப்படி மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடியவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள். மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்ற மாநிலம்தான் நம் மாநிலம் தமிழ்நாடு.

நம் வீட்டு பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும், பள்ளிக்கூடத்திற்கு சென்றால் மட்டும் பத்தாது. உயர்கல்வி படிக்க கல்லூரிக்கு செல்ல வேண்டும் என்று அரசு பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரிக்கு உயர்கல்விப் படிக்க சென்றாலும், புதுமைப்பெண் திட்டத்தின் வாயிலாக ஆயிரம் ரூபாய் அந்தப் பெண்ணின் வங்கிக் கணக்கில் வைக்கப்படுகிறது. அதேபோல, தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலமாக, மாணவர்களின் வங்கிக் கணக்கில் ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்படும். இந்தத் திட்டங்களின் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று இருக்கிறார்கள். இதனால்தான் இன்றைக்கு 75 சதவிகித மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிப் படிப்பில் சேர்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும்விட மிக மிக முக்கியமான திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, செப்டம்பர் மாதத்துடன், இரண்டு வருடம் நிறைவடைகிறது. கிட்டத்தட்ட 1 கோடியே 20 லட்சம் மகளிருக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் என்று 24 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் நிறைய பேர் இந்தத் திட்டத்திற்கு மனு அளித்துள்ளார்கள். நிச்சயமாக நம் முதலமைச்சர் அவர்களின் வலியுறுத்தலின் பேரில், நல்ல முடிவை எடுத்து, இன்னும் கூடுதலான அளவிற்கு விரைவில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்ற உறுதிமொழியை உங்கள் முன்பு இங்கு கூறிக்கொள்கிறேன்.

இதுபோன்ற ஏராளமான திட்டங்களின் காரணமாகத்தான், இன்றைக்கு 11.19 விழுக்காடு வளர்ச்சியுடன் இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்துகொண்டு இருக்கிறது.

இதுவெல்லாம் பிடிக்காத சிலர்தான், தமிழ்நாட்டிற்கான சதித் திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். மும்மொழிக் கொள்கையை தமிழ்நாட்டிற்குள் திணிக்கப் பார்க்கிறார்கள். தேசிய கல்விக் கொள்கையை திணிக்கப் பார்க்கிறார்கள். குலக்கல்வித் திட்டத்தை திணிக்கப் பார்க்கிறார்கள். தொகுதி மறுவரையறையை தமிழ்நாட்டிற்குள் புகுத்தி, 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறைத்து, நம் மாநில உரிமைகளை எல்லாம் பறிக்கப் பார்க்கிறார்கள்.

இவ்வளவு இடையூறுகளுக்கு இடையே நம் முதலமைச்சர் அவர்கள் நல்ல திட்டங்களை நம் மக்களுக்குக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இங்கு நிறைய சிறுபான்மையின மக்கள் வந்திருக்கிறீர்கள். தி.மு.க-வுக்கும், சிறுபான்மையின மக்களுக்குமான பந்தம் இன்றைக்கு, நேற்று வந்தது கிடையாது. வளர்ந்தது கிடையாது.

தமிழ்நாட்டில் பிறை கொடியுள்ள ஒவ்வொரு வீட்டிலும், கருப்பு - சிவப்பு கொடி நிச்சயம் பறந்துகொண்டு இருக்கும். அதனால் தான் கழகம் இன்றைக்கும் சிறுபான்மை இன மக்களின் பாதுகாவலராக தொடர்ந்து இருந்து வருகிறது.

இதில் எனக்கு என்ன பெருமை என்றால், நான் பொதுவாழ்க்கைக்கு வந்து முதன்முறையாக கைதானது சிறுபான்மையினருக்கு ஆதரவான போராட்டத்தில்தான். சிறுபான்மையினருக்கு எதிரான குடியுரிமைச் சட்ட நகலை கிழித்தெறிந்த காரணத்தால்தான் நான் முதன் முதலில் கைது செய்யப்பட்டேன். அதை நினைக்கும்போது, இப்போதும் எனக்குப் பெருமையாக இருக்கிறது.

**200 தொகுதிகள் இலக்கு!**

இப்படி நம் தலைவர் அவர்கள் பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறார்கள். இவற்றையெல்லாம் அடுத்த ஆறு மாதங்களுக்கு மக்களிடம் கொண்டு சென்று பிரச்சாரத்தை செய்ய வேண்டும். தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கை கொடுத்து இருக்கிறார்கள். குறைந்தது 200 தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழக அணி வெற்றிப்பெற வேண்டும் என்றுச் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்த 6 மாதம் களத்தில் இறங்கி, மக்களைச் சந்தித்து, அரசின் சாதனைகளை, முதலமைச்சரின் சாதனைகளைச் சொன்னோமென்றால், 200 இல்லை, 200-க்கும் அதிகமான தொகுதிகளில், நம் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிப்பெறும். நம் கழக அரசு 7-வது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம் முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாகத் தொடர்ந்து முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்றால், இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் அடுத்த 6 மாத காலம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மணமக்களுக்கு ஒரேயொரு வேண்டுகோள். நீங்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு, அதே நேரம் சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்று உங்கள் சார்பாக வாழ்த்துகிறேன்.

இல்வாழ்வில் அடியெடுத்து வைக்கின்ற மணமக்கள் சகோதரி சனோபர் பசீலா, சகோதரர் அப்துல் மாலிக் சல்மானும் இஸ்லாமும், இன்பத் தமிழும்போல, கலைஞரும் - கழகமும் போல, கழகத் தலைவரும் - உழைப்பும் போல பல்லாண்டு வாழ்க, நல்ல நண்பர்களாக வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.